[பேராசிரியர் க. அன்பழகன்] [2008 மார்ச் 20

திட்டத்தின்கீழ், இதுவரை ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்புகளும், இலவச எரிவாயு இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தி, மேலும் 8 இலட்சம் இலவச எரிவாயு அடுப்புகள் மற்றும் இணைப்புகள் வழங்க ரூபாய் 160 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

100. பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்யவும், அவர்களுக்குச் சத்தான உணவு கிடைக்கச் செய்யவும், ஆறு மாதங்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1,000 வீதம், மகப்பேறு உதவியாக ரூபாய் 6,000 வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை, 7 இலட்சம் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் விதிமுறைகளின்படி இப்பயன்களைப் பெற கர்ப்பிணிப் பெண்கள் குடும்ப வருமானச் சான்றிதழ் பெறவேண்டியுள்ளது. கருவுற்றிருக்கும் காலத்தில், இதற்காக அவர்கள் சிரமப்பட வேண்டியுள்ளதைக் கருத்தில்கொண்டு, வருமானச் சான்றிதழ் பெறவேண்டிய தேவையைத் தளர்த்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு கர்ப்பகாலப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் கிராம மருத்துவச் செவிலியர்களின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, இவர்களுக்கு வரும் நிதியாண்டிலிருந்து, இத்திட்டத்தின்கீழ் எவ்வித வருமானச் சான்றிதழும் இன்றி நிதியுதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

101. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, வழங்கப்படும் உதவித் தொகையை 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து 10,000 ரூபாயிலிருந்து, 15,000 ரூபாயாக இந்த அரசு உயர்த்தி வழங்கிவருகிறது. ஏழைக் குடும்பங்களின் திருமணச் செலவுகளுக்குப் பெரும் உதவியாக விளங்கிவரும் இத்திட்டத்தின்கீழ், இதுவரை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளனர். அதிகரித்துவரும் திருமணச் செலவுகளைக் கருத்தில்கொண்டு, வரும் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி ரூபாய் 15,000-லிருந்து ரூபாய் 20,000 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 65,000 ஏழைப் பெண்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்காக ரூபாய் 130 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.